## Tamil Christian Prayer Church தமிழ் கிறிஸ்தவ ஜெப தேவாலயம்

# 2009 – House Prayers Notes


February 2009: நம்பிக்கை (Trust) - - - - - - Page 2

March 2009: கிருபை (Grace) - - - - - - Page 3

April 2009: வல்லமை (Strength) - - - - - - Page 5

May 2009: ஆராதனை (Worship) - - - - - - Page 7

July 2009: பிதாவின் சித்தம் (God's will) - - - - - Page 9

Aug 2009: தேவனுடைய இராஜ்யம் அவருடைய நீதி (God's Kingdom and HIS righteousness) - - - - Page 11

Sep 2009: விசுவாசத்தோடுகூடிய பிரயாசம் (Effort with faith) - - - Page 12

Oct 2009: ஆயத்தப்படு, ஆயத்தப்படுத்து (be prepared and prepare others) - Page 14

Nov 2009: நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கு... (to attain to the resurrection from the dead.) - - - Page 16

Review of year 2009 – House Prayers - - - - - Page 18

## நம்பிக்கை

எரே 17:7 கர்த்தர் மேல் நம்பிக்கைவைத்து கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டு இருக்கிற மனுஷன் பாக்கியவான்.

**But blessed is the man who trusts in the LORD,whose confidence is in him.**

ஏன் பாக்கியவான்?

சங்கீதம் 5:11 - காப்பாற்றுகிறார்

உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக; நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்; உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக.

**But let all who take refuge in you be glad; let them ever sing for joy. Spread your protection over them, that those who love your name may rejoice in you.**

சங்கீதம் 28:7 - எப்படி காப்பாற்றுகிறார்

கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்.

**The LORD is my strength and my shield; my heart trusts in him, and I am helped.**

**My heart leaps for joy and I will give thanks to him in song.**

--------------

சங்கீதம் 17:7 - தப்புவிக்கிறார் (தானியேல் 3ம் அதி)

உம்மை நம்புகிறவர்களை அவர்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களினின்று உமது வலதுகரத்தினால் தப்புவித்து இரட்சிக்கிறவரே! உம்முடைய அதிசயமான கிருபையை விளங்கப்பண்ணும்.

**Show the wonder of your great love, you who save by your right hand those who take refuge in you from their foes.**

--------------

சங்கீதம் 37:4 - வாக்குத்தத்தம்

கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்.

**Delight yourself in the LORD and he will give you the desires of your heart.**

நீதி 28:25 - செழிக்கப்பண்ணுகிறார்

பெருநெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான்; கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான்.

**A greedy man stirs up dissension, but he who trusts in the LORD will prosper.**

---

நீதி 23:18 - நம்பிக்கை வீண்போவதில்லை

நிச்சயமாகவே முடிவு உண்டு; உன் நம்பிக்கை வீண்போகாது.

# <u>கிருபை</u>

2 **பேதுரு/2 Peter 3:18** நம்முடைய. . . . . . .இயேசுகிறிஸ்துவின் <u>கிருபையிலும்</u> அவரை அறிகிற அறிவிலும் <u>வளருங்கள்.</u>

## <u>I.</u>

ஆதியிலே தேவகிருபையினது யாவருக்கும் கிடைக்கவில்லை. ஒரு சிலருக்கு மட்டுமே கிடைத்தது.

**(யாத்திராகமம்/Exodus 33:19)** <u>எவன்மேல் கிருபையாயிருக்க சித்தமாயிருக்கிறேனோ</u> என்று கூறப்பட்டது.

(1) நோவாவுக்கு தேவனுடைய கண்களில் கிருபை கிடைத்தது. **(ஆதி./Gen. 6:8)**

(2) "என் கண்களில் உனக்கு கிருபை கிடைத்தது" என்று மோசேக்கு தேவன் கூறினார். **(யாத்./Exodus 33:17)**

(3) தாவீதைக்குறித்து "என் கிருபையை அவனைவிட்டு விலக்கமாட்டேன்"

**(1 நாளாகமம்./1 Chronicles 17:13)**

அதேவேளை **(1 நாளாகமம்./1 Chronicles 17:13)** சவுலைவிட்டு தேவன் கிருபையை விலக்கிவிட்டார். (கீழ்ப்படியாமையில்)

## <u>II</u>.

ஆனால் இப்போ கிருபையானது <u>யாவர்மேலும் பொழியப்பட்டுக்</u> கொண்டேயிருக்கிறது.

2 **தீமோத்தேயு / 2 Timothy 1:19,20** இரட்கராகிய இயேசுகிறிஸ்து பிரசன்னமானதால்

**யோவான் / John 1:17** கிருபையும் சத்தியமும் இயேசுகிறிஸ்து மூலமாய் உண்டாயின.

**ரோமர்/Romans 5:20** பாவம் பெருகின இடத்தில் கிருபை பெருகிற்று

ஏன் கிருபை பெருகுகிறது? கிருபையானது தேவகோபம் எழும்பாதபடி பாவத்துக்கும் தேவகோபத்திற்கும் இடையே நிற்கிறது.

கர்த்தராகிய கிறிஸ்து இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் கிருபையானது பெருகிக்கொண்டேயுள்ளது.

## <u>III.</u>

ஆகவேதான் அந்த கிருபையின் நிலைத்திருக்கும்படி அப்போஸ்தலர்கள் புத்தி சொல்கிறார்கள்

**எபிரெயர்/Hebrews 12:15-16** ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்து போகக்கூடாது.

முன்புபோல கிருபையை தேவன் விலக்கமாட்டார் / ஆனால் நாம் கிருபையைவிட்டு விலகாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

## IV.

நமக்கு கிருபையினால் கிடைக்கும் ஆசீர்வாதங்களை சிந்தித்து பார்ப்போம்.

1. கிருபையினால். . .இரட்சிப்பு
2. கிருபையினால். . .புதுப்பெலன் . .
3. . . .

## V.

அந்த கிருபையை நமக்கு கொடுத்த அந்த கிறிஸ்து இயேசுவையே சிந்திக்கக்கடவோம்.

அந்த கிருபையை நமக்கு பெற்றுக் கொடுக்கும்படி அவர்பட்ட பாடுகளை, அனுபவித்த வேதனையை நினைத்து நன்றி செலுத்துவோம்.

## <u>எழும்பு எழும்பு சீயோனே உன் வல்லமையைத் தரித்துக்கொள் ஏசாயா 52:1</u>

ஏசாயா 51:16 கூறுகிறது நீ என் ஜனம்.

எழும்பு எழும்பு <u>என் ஜனமே</u> உன் வல்லமையைத் தரித்துக்கொள்

இயேசு கிறிஸ்து இந்தப்பூமியில் வாழ்ந்த நாட்களில் தம்முடைய சீடர்களுக்கு சகல பிசாசுகளையும் துரத்தவும் வியாதியுள்ளவர்களைக் குணமாக்கவும் அவர்களுக்கு வல்லமையும் அதிகாரமும் கொடுத்து தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து பிரசங்கிக்க அனுப்பினார்.

ஆனால் இயேசுகிறிஸ்துவை சிலுவையில் அறையக்கொண்டு சென்றவுடனே அவர்களிடம் இருந்த வல்லமையும் அதிகாரமும் செயல்படவில்லை. அதுமட்டுமல்ல பயத்தினால் ஓடி ஒளித்துவிட்டார்கள்.

ஆனால் இயேசுகிறிஸ்து உயிர்தெழுந்தவுடனே அந்த உயிர்த்தெழுந்த வல்லமை மீண்டும் அவர்களுக்குள்ளே கிரியை செய்ய ஆரம்பித்தது.

இயேசுகிறிஸ்துவினால் அழைக்கப்பட்டு ஊழியம் செய்துகொண்டிருந்த பவுல் அப்போஸ்தலன்

பிலிப்பியர் 3:10ல் கூறுவது ......நான் அவருடைய **உயிர்த்தெழுதலின் வல்லமையை** அறிகிறதற்கு......

உயிர்த்தெழுதலின் வல்லமையை இன்னும் அறிய வேண்டும் இன்னும் அந்த வல்லமையைத் தரித்துக்கொள்ள வேண்டும் இன்னும் வல்லமை தன்னுடைய வாழ்வில் செயல்பட வேண்டும் என்று

வாஞ்சிக்கிறார்.

இம்மட்டுகாலமும் இருந்தது போதும்...... எழும்பு எழும்பு சீயோனே உன் வல்லமையைத் தரித்துக்கொள்

என்று அழைக்கும் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சத்தம் இந்த லெந்து சாட்களிலும் தொனித்துக்கொண்டே இருக்கிறது.

உன் வல்லமையைத் தரித்துக்கொள் .... உனக்கு அளிக்கப்பட்ட உன் வல்லமையைத் தரித்துக்கொள்.

எபேசியர் 3:20...நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமை.........(அவர்தான் பரிசுத்த ஆவியானவர் ............1 கொரி 6:19....உங்கள் சரீரம் பரிசுத்த ஆவியினுடைய ஆலயம்).....

அந்த பரிசுத்த ஆவியானவருடைய வல்லமை நம்மில் இருந்து வெளிப்பட வேண்டும்.

1) ரோமர் 8:26...நமக்காக வேண்டுதல் செய்கிறார்... ஆகவே நாம் வேண்டிக்கொள்கிறதற்கும் நினைப்பதற்கும் மேலாக நமக்குக் கிடைக்கிறது....

2) ஏசாயா 59:19...சத்துரு வரும்போது ஆவியானவர் கொடியேற்றுவார்..

3) எபேசியர் 6:12 நமக்குப் போராட்டம் உண்டு...ஆகவே அவருடைய சத்துவத்தின் வல்லமையில் பலப்பட வேண்டும். நம்மை பரிசுத்தமாகவும் கிறிஸ்து இயேசுவின் சாட்சிகளாக வாழவும் ஆத்தும ஆதாயம் செய்யவும் விடாத படிக்கு இவைகள் செயல்படுகின்றன. ஆகவே இவைகளுடன் போராடி மேற்கொள்ள

நாம் வல்லமையைத் தரித்துக்கொள்ள வேண்டும்

துரைத்தனங்களுடன்....

அதிகாரங்களுடன்

இப்பிரபஞ்சத்தின் லோகாதிபதிகளுடன்

வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளுடன்

3) ரோமர் 8:11... சாவுக்கான சரீரங்களை உயிர்ப்பிப்பார்.

அன்று இயேசுவை மறுதலித்த அவரைக் கைவிட்டு ஓடின சீடர்கள் அந்த உயிர்தெழுந்த வல்லமையைத் தரித்துக்கொண்ட பொழுதோ தைரியமாக அவரைக்குறித்து சாட்சி பகர்ந்தனர் பயத்திலிருந்து விடுதலையாகினர் பாவத்தை மேற்கொள்ளப் பெலனைப்பெற்றனர்.

இந்த நாளிலும் நாம் செய்யவேண்டியது

கர்த்தருக்குக் காத்திருந்து அவருடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்து அவருடைய சித்தத்தின்படி செய்யும்போது அவர் நமக்காக வைத்திருக்கும் பெலத்தைப்பெற்றுக்கொள்வோம்

# புத்தியுள்ளதும் தேவனுக்குப் பிரியமுமான ஆராதனை

\- - - -

ரோமர் 12:1

அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் **உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று,** தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், **இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.**

## Romans 12:1

இன்று ஆராதனை என்பது எமக்கு ஒரு சாதாரணமான காரியமாக மாறிவிட்டது. நாம் தேவனை எப்படியும் ஆராதிக்கலாம் எங்கும் ஆராதிக்கலாம் என்ற நிலைக்கு வந்துவிட்டோம். அது உண்மைதான்.

(1)

இன்றும்கூட பரலோகத்திலே ஆராதனை நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதை அறிவீர்களா?

ஏசாயா 6:2–4: ஒருவரையொருவர் நோக்கி சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். கூப்பிடுகிறவர்களின் சத்தத்தால் வாசல்களின் நிலைகள் அசைந்து, ஆலயம் புகையினால் நிறைந்தது.

**Isaiah 6:2-4:**

**Revelation / வெளி 4:1:** இவைகளுக்குப்பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன்.

**Revelation 4:1:**

வெளி 4:8: அவைகள் இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன.

**Revelation 4:8:**

அந்த கர்த்தர் மோசேக்கு கட்டளையிட்டார் தாம் வாசம் பண்ணுகிறதற்கு ஒரு பரிசுத்த ஸ்தலத்தை உண்டு பண்ணும்படி. அவர் வாசம் பண்ணும் ஸ்தலம் பரிசுத்தமானது. ஆகவேதான் வேதம் நாம் பரிசுத்தத்தோடு தேவனை ஆராதிக்க வேண்டும் என்று கூறுகிறது.

யாத் 19:22-23: கர்த்தரின் சமுகத்தில் வருகிற ஆசாரியர்களும், கர்த்தர் தங்களுக்குள்ளே சங்காரம் பண்ணாதபடி, தங்களைப் பரிசுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.மலையைச் சுற்றிலும் எல்லை குறித்து, அதைப் பரிசுத்தப்படுத்துங்கள்

**Exodus 19:22-23:**

**நமது ஆராதனை தேவனை நம்மத்தியில் கொண்டுவரக்கூடிய வண்ணம் அமைகிறதா ?**

**நம்முடைய ஆராதனை தேவனை பிரியப்படுத்துகிறதாக இருக்கிறதா. . . ?**

சங் 29:2: பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்.

**Psalm 29:2:**

எபி 12:14: பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.

**Hebrews 12:14:**

**1 பேதுரு 1:15-16:** உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே

**1 Peter 1:15-16:**

**2 கொரி 7:1**: மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்.

1) வார்த்தையிலே பரிசுத்தம் காணப்படட்டும்

2) சிந்தையிலே பரிசுத்தம் காணப்படட்டும்

3) செயல்களிலே பரிசுத்தம் காணப்படட்டும்

**2 Corinthians 7:1:**

தேவன் பங்கு பங்காகவும் வகைவகையாகவுமல்ல அப்பொழுதுதான் ஆதி அப்போஸ்தலர் மத்தியில் இறங்கினது போல அந்த ஆராதனையிலும் தேவன் தமது வல்லமையுடனும் தமது மகிமையுடனும் இறங்குவார்.

(2)

நம்மை தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பதே அவருக்கு நாம் செய்யும் புத்தியுள்ள ஆராதனை என்று வேதம் கூறுகிறது.

நம்முடைய சுயம் சுயசித்தம் யாவும் பலியிடப்பட வேண்டும். இனி நான் அல்ல கிறிஸ்துவே என்னில் வெளிப்பட வேண்டும் அவருடைய சித்தமே நம்மில் செயல்பட வேண்டும்.

## இதுவே நாம் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை

<u>உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக.</u> <u>மத்தேயு 6:10</u>

இன்று அனேக கிறிஸ்தவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையில் தேவனை நோக்கி இந்த ஜெபத்தை ஏறெடுக்கிறார்கள். ஆனால் அவர்களில் எத்தனைபேர் இந்த ஜெபத்தை கருத்தோடு ஏறெடுக்கிறார்கள்.

அவருடைய சித்தம் பூமியில் செய்யப்படுவதாக என்று ஜெபிக்கிற ஒவ்வொருவரும் தம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் செயல்பட இடம் கொடுக்கிறார்களா

ஜெபம்தான் அப்படி..... ஆனால் நிஜமோ....... எமது சித்தம் செயல்படும்படிக்கு எங்களால் ஆனமட்டும் எங்கள் சிந்தனை செய்கை பேச்சு நடத்தை எல்லாவற்றாலும் முயற்சி செய்கிறது.

தேவனுடைய சித்தம் பூமியில் செய்யப்படவேண்டுமாயின்

முதலாவது தேவடைய பிள்ளைகளின் தனிப்பட்ட. குடும்ப. வாழ்க்கையில் தேவனுடைய சித்தம் செயல்பட இடம் கொடுக்கவேண்டும்

தேவனுடைய சித்தம் - இரண்டு வகைப்படும்

1. தேவனுடைய பொதுவான சித்தம்- இது பொதுவானது-
2. நமது தனிப்பட்ட வாழ்க்கைக்கான விசேஷ சித்தம்

அதாவது நாம் தேவனுடைய பொதுவான சித்தம் செய்வது ஒன்று

தேவனுடைய சித்தம் நம்முடைய வாழ்க்கையில் செயல்பட இடம் கொடுப்பது இன்னொன்று.

## தேவனுடைய பொதுவான சித்தம்

தேவன் தமது சித்தத்தை எல்லாம் வேதத்தில் எழுதிவைத்து இருக்கிறார். அதற்குக ் கீழ்ப்படிவதே அவருடைய சித்தம் செய்வது

1 தெச 4:3 **பரிசுத்தமுள்ளவர்களாக** வேண்டுமென்பதே

1 தெசலோனிக்கேயர் 5:18 **எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்**. அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது

1 பேதுரு 2:15 நீங்கள் **நன்மைசெய்கிறதினாலே** புத்தியீன மனுஷருடைய அறியாமையை அடக்குவது தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

**தேவனுடைய சித்தம் நம்முடைய வாழ்க்கையில் செயல்பட நாம் என்ன செய்யவேண்டும்**

ரோமர் 12:2 **நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்**

எபேசியர் 5:17 ஆகையால், **நீங்கள் மதியற்றவர்களாயிராமல், கர்த்தருடைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.**

கொலோ 1:9 இதினிமித்தம், நாங்கள் அதைக் கேட்ட நாள்முதல் உங்களுக்காக இடைவிடாமல் ஜெபம்பண்ணுகிறோம்; நீங்கள் எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும்,

கொலோ 4:12 எப்பாப்பிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்.

பவுல் அப்போஸ்தலன் கேட்டது போன்று அனுதினமும் கேட்போம்

அப்போஸ்தலர் 9:6 **ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான்.**

அப்படியே நம்மை அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக்கொடுப்போம்

## <u>முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும் மத் 6:33 (Matthew 6:33)</u>

இயேசுகிறிஸ்து 2000 வருடங்களுக்கு முன் இந்த பூமியில் இருந்தபோது **ஊர் ஊராக சுற்றித்திரிந்து** தேவனுடைய இராஜ்யத்தைக்குறித்த **சுவிசேஷத்தைப் பிரசங்கித்து** சகல வியாதிகளையும் சகல நோய்களையும் சொஸ்தமாக்கினார்

ஆனால் அவரைத் **தேடிவந்த மக்களுக்கும் சீஷர்களுக்கும்** இன்னும் தேவாலயங்களிலும் **தேடிவந்த மக்களுக்கும் உபதேசித்தார்** என்று வாசிக்கிறோம் அதில் ஒன்று தான் மத் 6:33 **(Matthew 6:33)**

---

இயேசுகிறிஸ்து மனுஷருடைய இருதயங்களை நன்றரக அறிந்திருந்த படியால் ----------------

ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் (அறிவற்றவர்கள்) நாடித்தேடுகிறார்கள், இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் என்றார்.

தேவனைக்குறித்த அறிவுள்ளவர்கள் கூட இதையே தேடுவார்கள் என்று அறிந்தவராய்

முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும் என்றார்.

இயேசுகிறிஸ்து சாலோமோன் இராஜாவைக் குறித்து கூறுகிறார் சாலோமோன். இராஜா என்ன செய்தான் தேவ ஞானத்தை மட்டும் கேட்டான். அவன் கேட்காத ஐசுவரியத்தையும் கனத்தையும் தேவன் கொடுத்தார்

அதேபோன்று முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகிறவர்களுக்கு மிகுதி எல்லாம் கூடக் கொடுக்கப்படும் என்றார்

---

தேவனுடைய இராஜ்யம் என்பது என்ன? ரோமர் 14:17 **(Romans 14:17)**

**தேவனுடைய ராஜ்யம்** புசிப்பும் குடிப்புமல்ல, அது **நீதியும், சமாதானமும்**, **பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.**

1. **பரலோக ராஜ்யம் நீதியை உடையது - பரலோக ராஜ்யம் எங்கோ அங்கு நீதி உண்டு**

   சுய நீதி உடையது அல்ல. ரோமர் 10:3 **(Romans 10:3)**

   தேவனுடைய நீதி சங் 119:138, 172 **(Psalm 119:138, 172)**

   **எங்கே தேவநீதி உண்டோ அங்கு பரலோக ராஜ்யம் உண்டு**

2. **பரலோக ராஜ்யம் சமாதானத்தை கொடுக்கும் - பரலோக ராஜ்யம் எங்கோ அங்கு சமாதானம் உண்டு**

   சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய …..எபேசியர் 6:15 **(Ephesians 6:15)**

   அவர் சாமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி….அப்போ 10:36 **(Acts 10:36)**

   பரலோக ராஜ்யத்துக்குரிய சுவிசேஷம் சமாதானத்தின் சுவிசேஷம் என்று அழைக்கப்படும்

   **எங்கோ சமாதானம் உண்டோ அங்கு பரலோக ராஜ்யம் உண்டு**

3. **பரலோக ராஜ்யம் பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோசமுமாய் இருக்கிறது.**

நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

கொலோ 3: 1, 2 **(Colossians 3:1,2)**

---

**இவைகளைத் தேடுகிறவனுக்கு மிகுதி எல்லாம் கூடக் கொடுக்கப்படும்.**

# பலன் கொடுக்கும்படிக்கு பிரயாசப்படுங்கள்

## மத்தேயு/Matthew 13:3-24 மாற்கு/Mark 4:2-25

இங்கே 4 விதமான நிலங்களைக் குறித்துப் பார்க்கிறோம்.

1. வழி அருகே - மத்தேயு/Matthew 13: 4, 19
2. கற்பாறை - மத்தேயு/Matthew 13: 5, 6, 20, 21
3. முள்ளுள்ள இடம் - மத்தேயு/Matthew 13: 7, 22
4. நல்லநிலம் - மத்தேயு/Matthew 13: 8, 23

இந்த 4 நிலங்களிலும் **நல்ல நிலம் மாத்திரம் பலன் கொடுத்தது**. மற்ற நிலங்கள் ஒன்றும் பலன் கொடுக்கவில்லை என்று பார்க்கிறோம்.

**இந்த உவமையை இயேசு சொன்னபின்பு**, மாற்/Mark 4:24 இல் **நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள்** என்றார்.

தேவனுடைய வார்த்தை உங்களுக்குள் கிரியை செய்து பலன்கொடுக்க வேண்டுமாயின் அது **நீங்கள் கேட்கிற விதத்தில், கேட்கிற அளவில்** தான் தங்கியுள்ளது.

தேவனுடைய வசனமாகிய விதை முதலில் உங்களுக்குள் கிரியை செய்ய வேண்டும். அதன்பின்புதான் 30, 60, 100 ஆக உங்கள் வாழ்க்கையில் பலன்கொடுத்து பிறருக்குப் பிரயோஜனமாக இருக்கும். ஒவ்வொரு தேவனுடைய வசனமும் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. அது ஒவ்வொருவருடைய **விசுவாசத்திற்கேற்ப அவர்களுக்குள் கிரியைசெய்து பலன்கொடுக்கிறது**.

உதாரணம் : இயேசுகிறிஸ்துவின் தழும்புகளால் குணமானோம் என்ற வாக்குத்தத்தம் அவரவருடைய விசுவாசத்திற்கேற்ப 30, 60, 100 வீதம் குணமடைகிறார்கள்.

மற்ற 3 நிலங்களும் பலன்கொடுக்காததற்கான காரணத்தை இயேசு இங்கு கூறுகிறார் -

**வழி அருகே** - அவர்களுடைய **இருதயம் கொழுத்து** இருந்தது, (மத்தேயு/Matthew 13:15) வேதவசனம் உட்செல்ல இடமேயில்லை.

**கற்பாறை – காதால் மந்தமாகக் கேட்டு** தாங்கள் காணாதபடிக்கு தங்கள் **கண்களை மூடிக்கொண்டார்கள்**, (மத்தேயு/Matthew 13:15) வேதவசனம் வேரூண்ட முன்னமே ஆவிக்குரிய கண்களை மூடிக்கொண்டார்கள்,

**முள்ளுள்ள இடம் - உலக கவலை, ஐசுவரியத்தின் மயக்கம்**, என்பன தேவனுடைய வார்த்தை அவர்களுக்குள் பலன்கொடுக்க முடியாதபடிக்கு நெருக்கிப்போடுகிறது (மத்தேயு/Matthew 13:22)

**முள்ளுள்ள இடம் பலன்கொடுக்காததற்கான காரணம்**

உதாரணம் -

**உலக கவலை - எப்படி வேதவசனம் கிரியை செய்யாதபடிக்கு நெருக்குகிறது?**

மத்தேயு/Matthew 21:22 – நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளை எல்லாம் பெறுவீர்கள். என்ற வாக்குத்தத்தை சொல்லி, அத்துடன் நாடு முழுவதும் வேலையில்லா பிரச்சனை எப்படி வேலை கிடைக்கும் என்பதையே சிந்தித்துக்கொண்டு ஜெபித்தால் எப்படி வசனம் அவனுக்குள் கிரியை செய்யும்?

**ஐசுவரியத்தின் மயக்கம் - எப்படி வேதவசனம் கிரியை செய்யாதபடிக்கு நெருக்குகிறது?**

ஒரு பொருளை வாங்குவதற்கு அது தேவனுக்குச் சித்தமானதா என்று அறியவோ அல்லது அவரையே சார்ந்து நிற்கவோ விடாதபடிக்கு அந்த ஐசுவரியம் மயக்கிப் போடுகிறது.

இந்த உவமையை இயேசு கூறியபின்பு சொன்ன காரியம்

**மத்தேயு/Matthew 13: 12 உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான், இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.**

**வேதவசனத்தைக் குறித்தே இயேசு மேலேயுள்ள வசனத்தைக் கூறினார்.**

**தேவனுடைய வசனமானது யாரிடத்தில் கிரியைசெய்து 30, 60, 100 ஆக பலன் கொடுக்கிறதோ அவர்களுக்கே பரிபூரணம் அடையும்படிக்கு இன்னும் வசனம் கொடுக்கப்படும்**

**முதலாவது தேவனுடைய வசனத்தை விசுவாசத்தோடு கேட்டு பலன் கொடுக்கும்படிக்கு பிரயாசப்படுவோம்**

**உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும் தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள். (லூக்கா/Luke 12:35,36)**

தேவன் இஸ்ரவேலரை நோக்கி நீங்கள் உங்கள் அரைகளில் கச்சை கட்டிக்கொண்டும் உங்கள் கால்களில் பாதரட்சை தொடுத்துக்கொண்டும், உங்கள் கையில் தடி பிடித்துக்கொண்டும் அதைத் தீவிரமாய்ப் புசிக்கக்கடவீர்கள். (யாத்./**Exodus** 12:11) என்றார்.

<u>அரைகட்டப்படுவது எதைக்காண்பிக்கிறது?</u> <u>*ஆயத்தத்தைக் காண்பிக்கிறது.*</u>

புறப்படுங்கள் என்று சத்தம் தொனித்தவுடனே இஸ்ரவேலர் அந்த இடத்தை விட்டுப் உடனே புறப்பட்டுவிட வேண்டும். அரைகளில் கச்சை கட்டிக்கொண்டு அதன்பிற்பாடு புசிக்கும்படி தேவன் கட்டளையிடுகிறார்.

முதலாவது புறப்படுவதற்கு தங்களை ஆயத்தம் செய்ய வேண்டும் பிற்பாடுதான் புசித்தலும் குடித்தலும் எந்தக்காரியங்களானாலும்.

இதேபோன்று தான் தங்களை ஆயத்தம் பண்ணிணவர்கள் இயேசுகிறிஸ்து வரும்போது அவருடனே கூடப்புறப்படுவார்கள்.

**அப்படியே அவர்கள் வாங்கிப்போனபோது மணவாளன் வந்துவிட்டார்: ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள்: கதவும் அடைக்கப்பட்டது. (மத்./Matthew 25:10)**

**அந்தப்படியே நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள் என்றார். (லூக்கா/Luke 12:40)**

<u>**எப்படிப்பட்ட ஆயத்தம்**</u>

**<u>சத்தியம்</u> என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும்**

**(எபே./Ephesians 6:14) தேவனுடைய வசனமாகிய சத்தியத்தை எப்போதும் அணிந்தவர்களாகவும்,**

**நீதி அவருக்கு அரைக்கட்டும். (ஏசா./ Isaiah 11:5)**

**தேவனுடைய நீதியை எப்போதும் நிறைவேற்ற ஆயத்தமுள்ளவர்களாகவும் காணப்பட வேண்டும்**

**வேலைக்காரன் தன் எஜமானுடை சத்தம் கேட்கிறவனாகவும் அவருடைய சித்தம் செய்ய ஆயத்தமாகவும்**

**இருக்கிறதைப்போன்று காணப்படவேண்டும்**

**நீ எனக்குச் சாப்பாடு ஆயத்தம் பண்ணி, அரைகட்டிக்கொண்டு, நான் போஜனபானம்பண்ணுமளவும் எனக்கு ஊழியஞ்செய், அதற்குப்பின் நீ புசித்துக் குடிக்கலாம் என்று அவனுக்குச் சொல்லுவானல்லவா? (லூக்./Luke 17:8)**

<u>இதோ, **சீக்கிரமாய்** வருகிறேன் என்று இயேசு கூறினார்</u>

**ஆகையால், நீங்கள் உங்கள் மனதின் அரையைக் கட்டிக்கொண்டு, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து: இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு அளிக்கப்படுங் கிருபையின்மேல் பூரண நம்பிக்கையுள்ளவர்களாயிருங்கள். (1பேது./1 Peter 1:13) என்று பேதுரு புத்தி சொல்கிறார்.**

**(எசே./Ezekiel 38:7) நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து: நீ அவர்களுக்குக் காவலாளனாயிரு.**

**இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும் அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன். பிலி 3:10, 11**

அவரை (இயேசுகிறிஸ்துவை), அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை, அவருடைய பாடுகளின் ஐக்கியத்தை, அறியவிரும்புகிறதாக பவுல் கூறுவதை நாம் பார்க்கிறோம்.

ஒரு விசுவாசி இவைகளை அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்

**1வது கிறிஸ்துவை அறியவேண்டும்**

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத்தந்தருளவேண்டுமென்றும் என்று பவுல் ஜெபிக்கிறார். எபே 1:17,

இன்று அனேகர் எப்படியாக அறிந்திருக்கிறார்கள்? சிலர் அவரை அரவணைக்கிற, தேற்றுகிற, அன்புசெலுத்துகிற தாயாக, இன்னும் சிலர் பரிகாரியாக, இன்னும் சிலர் இரக்கமுள்ள தேவனாக, பாதுகாக்கிற தேவனாக ........... இப்படியாக பலவிதங்களில் அவரை அறிந்திருக்கிறார்கள். ஆனால் அவரை சிட்சித்து வழி நடத்துகிற தந்தையாக அல்லது, நீதியுள்ள நியாயாதிபதியாக, ......இப்படியாக இன்னும் அறியவில்லை. அவரை நாம் எல்லாமாக அறிய வேண்டும். **மூளை அறிவினால் அறிகிற அறிவு அனுபவரீதியாக மாற வேண்டும்**

**2வது உயிர்த்தெழுதலின் வல்லமையை அறியவேண்டும்**

**எல்லாத் துரைத்தனத்துக்கும், அதிகாரத்துக்கும், வல்லமைக்கும், கர்த்தத்துவத்துக்கும்,** இம்மையில்மாத்திரமல்ல மறுமையிலும் பேர்பெற்றிருக்கும் எல்லா நாமத்துக்கும் **மேலாய் அவர் உயர்ந்திருக்கத்தக்கதாக**, எபே1:20

கிறிஸ்துவுடனேகூட எழுந்திருப்போமானால் அவருடைய உயிர்த்தெழுந்த வல்லமைக்குப் பங்குள்ளவர்களாய் மாறுகிறோம். எல்லா வல்லமைக்கும் மேலான வல்லமை அது.

பாவத்தை மேற்கொள்ள கூடியது, சாபத்தைப் போக்கக் கூடியது, உலகம், மாம்சம், பிசாசை மேற்கொள்ளக்கூடியது

வியாதியை மேற்கொள்ளக்கூடியது.

அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்.ரோமர்8:11

இதை நம்முடைய அனுபவமாக மாற்றிக்கொள்ள வேண்டும்

**3வது பாடுகளின் ஐக்கியத்தை அறியவேண்டும்**

கிறிஸ்துவின் பாடுகளை அறிந்திருக்கிறோம் ஆனால் பங்காளிகளாக தயங்குகிறோம்.

அவரோடே கூட பாடுபட்டால் அவரோடே கூட ஆளுகை செய்வோம்

பவுலின் பாடுகளைக்குறித்து இங்கே வாசிக்கிறோம்

கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்.

கலாத் 6:17

அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரரா? நான் அதிகம்; புத்தியீனமாய்ப் பேசுகிறேன்; நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன், அதிகமாய் அடிபட்டவன், அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டவன். 2கொரி 11:23,

யூதர்களால் ஒன்றுகுறைய நாற்பதடியாக ஐந்துதரம் அடிபட்டேன்; 2கொரி11:24

மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டேன், ஒருதரம் கல்லெறியுண்டேன், மூன்றுதரம் கப்பற்சேதத்தில் இருந்தேன், கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன். 2கொரி11:25

**இவைகளை நாம் அறியவேண்டுமாயின்  நாம் என்ன செய்ய வேண்டும்?**

## அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்றும், குப்பையுமாக *எண்ண வேண்டும்*

# Review of year 2009 – House Prayers

**February 2009: நம்பிக்கை (Trust)**

எரேமியா 17:7 (கர்த்தரை தன் நம்பிக்கையாக கொண்டு இருக்கிற மனுஷன் பாக்கியவான்.)

Jeremiah 17:7 ("blessed is the man who trusts in the LORD, whose confidence is in him.)

**March 2009: கிருபை (Grace)**

2 பேதுரு 3:18: (இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்).

2 Peter 3:18: (But grow in the grace and knowledge of our Lord and Savior Jesus Christ.)

**April 2009: வல்லமை (Strength)**

ஏசாயா 52:1: (எழும்பு எழும்பு சீயோனே உன் வல்லமையைத் தரித்துக்கொள்)

Isaiah 52:1: (Awake, awake, O Zion, clothe yourself with strength.)

**May 2009: ஆராதனை (Worship)**

ரோமர் 12:1 (நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை.)

Romans 12:1: (Therefore, I urge you, brothers, in view of God's mercy, to offer your bodies as living sacrifices, holy and pleasing to God—this is your spiritual act of worship.)

**July 2009: பிதாவின் சித்தம் (God's will)**

மத்தேயு 6:10 (உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக)

Matthew 6:10: (your kingdom come, your will be done on earth as it is in heaven.)

**Aug 2009: தேவனுடைய இராஜ்யம் அவருடைய நீதி (God's Kingdom and HIS righteousness)**

மத் 6:33: (முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள் அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும்)

Matthew 6:33: But seek first his kingdom and his righteousness,
and all these things will be given to you as well.

**Sep 2009: விசுவாசத்தோடுகூடிய பிரயாசம் (Effort with faith)**

மத்தேயு 13:12: உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். பரிபூரணமும் அடைவான்,
இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும்.
*(வேதவசனத்தைக் குறித்தே இயேசு மேலேயுள்ள வசனத்தைக் கூறினார்).*

Matthew 13:12: Whoever has will be given more, and he will have an abundance.
Whoever does not have, even what he has will be taken from him.
*(Jesus Christ mentioned this verse about HIS word)*

**Oct 2009: ஆயத்தப்படு, ஆயத்தப்படுத்து (be prepared and prepare others)**

எசேக்கியேல் 38:7: நீ ஆயத்தப்படு, உன்னுடனே கூடின உன் எல்லாக் கூட்டத்தையும் ஆயத்தப்படுத்து: நீ அவர்களுக்குக் காவலாளனாயிரு.

Ezekiel 38:7. 'Get ready; be prepared, you and all the hordes gathered about you,
and take command of them.

**Nov 2009: நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கு...**
**(to attain to the resurrection from the dead.)**

பிலிப்பியர் 3:10-11. ......இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், ............

Philippians. 3:7-8, 10-11. ...............I want to know Christ and the power of his resurrection and the fellowship of sharing in his sufferings, becoming like him in his death, [11]and so, somehow, to attain to the resurrection from the dead.